ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1794/10 - 2013 ජනවාරි මස 22 වැනි අඟහරුවාදා - 2013.01.22

*1794/10 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 22 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### *1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டம்*

*14 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

கைத்தொழில் மற்றும் வாணிப அமைச்சர் ரிஷாட் பதியுதீன் ஆகிய நான், நிதி, திட்டமிடல் அமைச்சின் இணைக்கப்பாட்டுடன், 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் 14 (1) ஆம் பிரிவின் கீழ் எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் :-

(I) 2013 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 01 ஆந் திகதி முதல் பயன்வலுப்பெறும் வகையில், இங்கு கீழ் தரப்பட்டுள்ள I ஆம் அட்டவணையின் II ஆவது மற்றும் III ஆவது நிரல்களில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள பொருட்களின் ஏற்றுமதி யின் பேரில், அவற்றிற்கு நேரொத்த IV ஆவது நிரலில் குறிப்பிடப்பட்டிருக்கும் சதவீதங்களின்படி செஸ் வரியொன்று தீர்மானிக்கப்பட்டு அறவிடப்படல் வேண்டும். அவ்வட்டவணையின் நிரல் IV ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டிருக்கும் கொழும்பு தேயிலை ஏல விற்பனை சராசரி விலையானது கீழ்வருமாறு திர்மானிக்கப்படுதல் வேண்டும்.

ஒவ்வொரு மாதத்திற்குமான கொழும்பு தேயிலை ஏலவிற்பனை சராசரி விலையானது இலங்கை தேயிலைச் சபை பணிப்பாளர் நாயகத்துடனான கலந்தாலோசனையின் பின்னர் சுங்கப் பணிப்பாளர் நாயகத்தினால் தீர்மானிக்கப்படுவதுடன் அவ் விலையானது அந்த மாதத்தின் முதலாம் திகதி முதல் பயன்வலுப்பெறும். கொழும்பு தேயிலை ஏலவிற்பனை சராசரி விலையானது, விலைக் கணிப்பீடு பயன்வலுப்பெறுகின்ற திகதிக்குரிய மாதத்திற்கு தொடர்தேர்ச்சியான முன்னைய இரண்டு மாதங்களில் கொழும்பு தேயிலை ஏல விற்பனை சந்தையில் நிலவிய சராசரி தேயிலை விலைகளைக் கவனத்திற் கொண்டு தீர்மானிக்கப்படும்.

அதற்கேற்ப, 2012.11.08 ஆந் திகதிய 1783/20 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியிலுள்ள அட்டவணையின் நிரல் I இல் இ. பொ. தலைப்பு 09.02 இன் கீழ் குறிப்பிடப்படும் ஒவ்வொரு பொருட்களுக்கும், அவற்றிற்கு நேரொத்த IV ஆம் நிரலில் குறிப்பீடு செய்யப்பட்ட செஸ் வரியானது, 2013 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 01 ஆந் திகதி முதல் பயன்வலுப் பெறும் வகையில் திருத்தியமைக்கப்படுகிறது.

(II) மேற்குறித்த ஏற்றுமதிகளுக்கான சகல பெறுகைகளும் வங்கி முறைமையினூடாக இந்நாட்டிற்கு அனுப்பப்பட்டுள்ளது என்பது சுங்கப் பணிப்பாளர் நாயகத்தினால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

(III) 2012.11.08 ஆந் திகதிய 1783/20 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் இ. பொ. தலைப்பு 41.07 இன் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் ஒவ்வொறு பண்டங்களுக்குமாக அறவிடப்பட்ட செஸ் வரியானது, இங்கு அட்டவணை II இல் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள பொருட்களுக்கு நேரொத்த வகையில் அறவிடப்படுவதானது, 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 23 ஆந் திகதி முதல் பயன்வலுப்பெறும் வகையில் இரத்துச் செய்யப்படுகிறது என இத்தால் பிரகடனப்படுத்துகிறேன்.

ரிஷாட் பதியுதீன்,
கைத்தொழில் மற்றும் வாணிப அமைச்சர்.

கைத்தொழில் மற்றும் வாணிப அமைச்சு,
கொழும்பு,
2013, சனவரி 22.

*அட்டவணை I*

| இ. பொ. தலைப்பு I | இ.மு.பொ. குறியீடு II | | விபரம் III | செஸ்வரியின் விகிதம் IV |
|---|---|---|---|---|
| | | | | |
| **09.02** | | | **தேயிலை, வாசனையூட்டப்பட்டவை அல்லது வாசனையூட்டப்படாதவை** | |
| | | | | |
| | 0902.40 | - | பிற கருமை நிறத் தேயிலை (நொதிக்கப்பட்டவை) மற்றும் பகுதி நொதிக்கப்பட்ட தேயிலை | |
| | | ---- | பிற | |
| | 0902.40.91 | ---- | முழுமையாக இலங்கை உற்பத்தியென இலங்கைத் தேயிலைச் சபையினால் சான்றுப்படுத்தப்பட்டவை, வாசனையூட்டப்பட்டவை<br>பிற | ஒரு கி. கி. ரூபா 10/- அல்லது குறித்த கிழமையில் கொழும்பு தேயிலை ஏல விற்பனையில் சராசரித் தேயிலை விலையில் 2.5% இரண்டில் எது கூடியதோ அத்தொகை. |
| | 0902.40.92 | ---- | முழுமையாக இலங்கை உற்பத்தியென இலங்கைத் தேயிலைச் சபையினால் சான்றுப்படுத்தப்பட்டவை, பிற, | ஒரு கி. கி. ரூபா 10/- அல்லது குறித்த கிழமையில் கொழும்பு தேயிலை ஏல விற்பனையில் சராசரித் தேயிலை விலையில் 2.5% இரண்டில் எது கூடியதோ அத்தொகை. |
| | 0902.40.93 | ---- | பிற, வாசனையூட்டப்பட்டவை | ஒரு கி. கி. ரூபா 10/- அல்லது குறித்த கிழமையில் கொழும்பு தேயிலை ஏல விற்பனையில் சராசரித் தேயிலை விலையில் 2.5% இரண்டில் எது கூடியதோ அத்தொகை. |
| | 0902.40.99 | ---- | பிற, | ஒரு கி. கி. ரூபா 10/- அல்லது குறித்த கிழமையில் கொழும்பு தேயிலை ஏல விற்பனையில் சராசரித் தேயிலை விலையில் 2.5% இரண்டில் எது கூடியதோ அத்தொகை. |
| | | | | |

*அட்டவணை II*

| இ. பொ. தலைப்பு I | இ.மு.பொ. குறியீடு II | | விபரம் III |
|---|---|---|---|
| 41.07 | | | **தலைப்பு 41.14 இன் பதனிடப்பட்ட தோல் தவிர்ந்த காய்க்கப்பட்டு அல்லது பதனிடப்பட்ட தன்பிறகு மேலும்மெருகூட்டப்பட்ட பதனிடப்பட்ட தோல்பதனிடப்பட்ட தோல்பார்ச்மென் தயாரிப்புகள் அடங்கலாக எருதினப்பதனிடப்பட்ட தோல்(எருமை அடங்கலாக) அல்லது குதிரை இன மிருகங்கள் உரோமம்அகற்றிய பிளக்கப்பட்ட அல்லது பிளக்கப்படாதவை** |
| | | | |
| | | - | பிற (பாகங்கள் உட்பட) |

2- 281

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.